# இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருத்தல்

Transcribed from a message spoken in August 16, 2015 in Chennai

By *R.S.Milton*

நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிற கருத்தை உங்கள் மனதிலே பதியவைப்பதற்காக எபிரெயர் 11ஆம் அதிகாரம் 24–26வரையுள்ள மூன்று வசனங்களை வாசிப்போம். *"விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்"*.

**இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து...**

வாராவாரம் நாம் செய்திகளைக் கேட்கிறோம். ஒருவேளை, நாம் ஏற்கெனவே கேட்டதை மீண்டும் கேட்டால் அது நம் மனதிலே பதியலாம்; மீண்டும் கேட்காவிட்டால் அது நம் மனதிலே பதியாமல் போய்விடலாம். எனவே, குறைந்தபட்சம் **இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருத்தல்** என்ற இந்தச் சொற்றொடர் உங்கள் மனதிலே பதியவேண்டுமென்று நினைக்கிறேன்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி, *"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்,"* என்று எபிரெயர் 12ஆம் அதிகாரம் 2ஆம் வசனம் கூறுகிறது.

**இனிவரும் சந்தோஷத்தின்பொருட்டு...இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருத்தல்...**

## மனிதன் உடனடி பலன்மேல் நோக்கமாயிருக்கிறான்

மனிதர்கள் பொதுவாக இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எதையும் செய்வதில்லை. "நீங்கள் இன்றைக்கு ஒன்று செய்தால் பத்து வருடம் கழித்து உங்கள் தலைமுறை மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும்," என்றால் நம்மில் யாராவது அதைச் செய்வோமா? "பத்து தலைமுறைகள் கழித்து உங்கள் தலைமுறையெல்லாம் மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும்," என்பதற்காக யாராவது எதையாவது கொடுப்போமா? ஒருவேளை நம்முடைய பிள்ளைகள் ஆசீர்வாதமாக இருக்கும் என்பதற்காக வேண்டுமானால் நாம் ஏதாவது ஒன்றைச் செய்வோம். அதுவும்கூட கடினம்தான். நம்முடைய பிள்ளைகளுக்காக நாம் செய்வோம் என்று நாம் சொல்கிறோம். ஆனால் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதற்காக நாம் ஏதாவது ஒன்றைச் செய்வோமா என்றால் அது மிகவும் கடினம் அல்லது நாம் இன்றைக்குச் செய்கின்ற ஒரு செய்கையின் பலன் இனி வரும் தலைமுறைக்கு, இரண்டு தலைமுறைகள், மூன்று தலைமுறைகள் கழித்து அது நன்மையாக இருக்காது நான் இன்று செய்கின்ற செய்கை இரண்டு, மூன்று தலைமுறைகள் கழித்து தீமையைக் கொண்டுவரும் என்று தெரிய வந்தால் அதற்கு அஞ்சி நான் அந்தச் செயலை செய்யாதிருப்பேனா என்றால் அதுவும் இல்லை. நன்மையாக இருந்தாலும் சரி, தீமையாக இருந்தாலும் சரி, மனிதனுடைய இயல்பு, மனிதனுடைய தன்மை, மனிதனுடைய குணம் என்னவென்று கேட்டால் "எனக்கு உடனடி பலன் வேண்டும். இனிவரும் பலனைப்பற்றி எனக்குக் கவலை இல்லை".

இதை பிரத்தியட்சமாகச் சொன்ன அரசன் ஒருவன் உண்டு. அவருடைய பெயர் எசேக்கியா. அவன் ஒரு செயல் செய்தான். அதனுடைய விளைவு தீமை. அவன் சாவுக்கு ஏதுவாக வியாதிப்பட்டான். "நீ செத்துவிடுவாய்," என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். உடனே அவர் கர்த்தரை நோக்கி ஜெபித்தார். கர்த்தர் அவனை அற்புதமாகச் சுமாக்கினார். அவனுடைய சுகம் எந்த அளவுக்கு அற்புதம் என்றால் சுற்றியிருந்த நாடுகளுக்கெல்லாம் அது தெரிய வந்தது. சாகக்கிடந்த எசேக்கியா ராஜா உயிர் பிழைத்துவிட்டார். அவருக்கு 16 ஆண்டுகள் வாழ்நாளோடு கூட்டிக் கொடுக்கப்பட்டது.

ஒரு அற்புதம் நடந்தால் போதும்; உடனே மக்கள் எல்லாரும் அந்த இடத்தை நோக்கிப் படையெடுப்பார்கள்.

## உடனடி பலன்மேல் நோக்கமாயிருந்த எசேக்கியா

எசேக்கியாவைப் பார்ப்பதற்காக பாபிலோன் ராஜா தன் தூதுவர்களை அனுப்பி வைத்தான். பாபிலோன் என்பது அப்போது வளர்ந்து வந்துகொண்டிருக்கிற சாம்ராஜ்ஜியம். சூப்பர் வல்லமையுடைய ராஜா தன் தூதுவர்களை அனுப்பியிருக்கிறான் என்றவுடனே எசேக்கியா கொண்டாடிவிட்டான். அவர்

தன் தேசத்தையெல்லாம் அவர்களுக்கு ஒருமுறை காண்பித்தார். தன் அரண்மனையைக் காண்பித்தார்; தேவாலயத்தைக் காண்பித்தார்; தேவாலயத்திலுள்ள பொக்கிஷங்களையெல்லாம் காண்பித்தார்.

தேவாலயம் என்பது சூப்பர் வல்லமையுள்ள இராஜாக்களுக்கும், ராஜா அனுப்புகிற தூதுவர்களுக்கும் திறந்து காண்பிக்க வேண்டிய இடம் அல்ல. அது தேவன் வாசம்பண்ணுகிற இடம். அது நொறுங்குண்ட இருதயம் உள்ளவர்களுக்கும், நறுங்குண்ட ஆவியுடையவர்களுக்கும் உள்ள இடமேதவிர சூப்பர் வல்லமையுடைய இராஜாக்களுக்கும், மந்திரிகளுக்கும் உரிய இடம் இல்லை.

கர்த்தர் ஏசாயாவை அனுப்பி, "நீ பாபிலோன் ராஜா அனுப்பின தூதுவர்களுக்கு எவைகளையெல்லாம் காண்பித்தாய்?" என்று கேட்கிறார். "நான் காண்பிக்காதது ஒன்றுமே இல்லை,"என்று அவர் சொல்கிறார். "யார் என்னை நாடி வருகிறது! சாதாரண ஊர் பெயர் தெரியாத ராஜா அல்ல. சூப்பர் வல்லமை யுள்ளவன்! அவன் தன் தூதுவர்களை அனுப்பியிருக்கும்போது நம்முடைய நாட்டிலே, காண்பிக்கக் கூடாத ஒன்று இருக்கிறதா! எல்லாவற்றையும் காண்பித்தேன்," என்று சொல்கிறார். "நீ காண்பித்த எல்லாவற்றையும் கொள்ளையடிப்பதற்காக, சூறையாடுவதற்காக பாபிலோன் ராஜா படையெடுத்து வருவான். நீ காண்பித்த பொக்கிஷங்களை மட்டுமல்ல. உன்னுடைய பிள்ளைகளையெல்லாம்கூட அவன் கொள்ளையடித்துக்கொண்டு போவான்," என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். எசேக்கியா ரொம்ப அதிர்ச்சியடைந்து விடுகிறான். ஆனால், தீர்க்கதரிசியிடம், "அது என்னுடைய நாட்களிலே நடந்து விடுமா? பிற்காலத்தில்தான் நடக்குமா?" என்று ஒரு கேள்வி கேட்கிறான். "இது பிற்காலத்தில்தான் நடக்கும்," என்று தீர்க்கதரிசி சொல்கிறான். உடனே அவன், "அப்பாடா! நானாவது நிம்மதியாக, சமா தானமாக, சாவேனே!" என்று பெருமூச்சு விடுகிறான். எக்கோனியாவின் நாட்களிலே அந்த சூறையாடு தல் நடைபெறுகிறது. அவனுடைய சில பிள்ளைகளைக் கொல்கிறான். எக்கோனியாவின் கண்களைப் பிடுங்குகிறார்கள். இதற்கு விதை விதைத்தது யார்? எசேக்கியா. "என்னுடைய காலத்திலே இந்த துன் பம் நடைபெறாது. ஒரு பெரிய விடுதலை. யாருடைய காலத்தில் இது நடைபெறும்? என்னுடைய இரண்டாம் தலைமுறை, ஐந்தாம் தலைமுறை, பத்தாம் தலைமுறையில் இது நடைபெறும்!" என்பதில் மனிதர்களுக்கு ஒருதிருப்தி. அவன் செய்த செயலின் விளைவை, அவன் விதைத்த விதையினுடைய அறுவடையை எந்தத் தலைமுறையிலே அவர்கள் அறுத்தார்கள் என்று துல்லியமாகச் சொல்லிவிட லாம்.

இவன் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிராத ஒரு மனிதன்.

## இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்த மோசே

மோசேயைப்பற்றிப் பார்க்கிறோம். அவர் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தார். "எனக்கு என்ன கிடைக்கும்?" என்பதில் அவர் நோக்கமாயிருக்கவில்லை.

எசேக்கியாவைப் பொறுத்தவரை இனிவரும் பலன் என்ன? "எனக்கு பாபிலோன் இராஜாவினுடைய உறவு கிடைத்தது. அவருடன் செல்ஃபி எடுத்துக்கொள்கிறேன். அவரும் நானும் ஒரே ஊஞ்சலில் இருந்து பேசிக்கொண்டிருக்கிறோம். ஊடகம் முழுவதும் தெரிகிறோம். சூப்பர் வல்லமையுள்ள ராஜாக்க ளெல்லாம், வெளியுறவுத்துறை மந்திரிகளெல்லாம், பார்த்திருக்கிறார்கள்". மனிதர்கள் தங்கள் கண் களைக்கொண்டு மதிப்பிடுவது பல சமயங்களில் மூடத்தனமாக இருக்கும்.

இந்த எல்லா ஊடக அலைவரிசைக்குப்பின் எசேக்கியா ஒரு விதை விதைத்திருக்கிறான். அந்த விதை வளர்ந்து அதன் அறுவடை எவ்வளவு கொடூரமாக இருக்கும் என்பதை நீங்கள் பார்க்க விரும்பினால் அதை எரேமியாவின் புத்தகத்திலே வாசிக்கலாம். "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீ ரூற்றுமானால் நலமாயிருக்கும். என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன். அழுது என்னால் முடியவில்லை. எருசலேமின் கோலத்தை, எருசலே மின் காட்சியை, பார்க்கும்போது அழுது என்னால் தீரவில்லை," (எரே. 9:1) என்று எரேமியா புலம்பு கிறார். பிற்காலத்திலே பாபிலோன் ராஜா வந்து, எருசலேமைத் தீக்கிரையாக்கி, கொள்ளையடித்து, சூறையாடி, பெண்கள் பிள்ளைகளை வெட்டிக் குத்தி, கொன்று போட்டான். இது மிகவும் எளிய எண் ணம்.

## இனிவரும் பலனும், பிறருடைய பலனும்

ஆபிரகாமை கர்த்தர் அழைத்தார். "*நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்*" (ஆதி. 12:1). எப்போதுமே இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருப்பது என்பதோடு இன்னொரு கருத்தும் சேரும். என்னுடைய பலனை மட்டுமல்ல, பிறருடைய பலன்.

இரண்டு எண்ணங்களை உங்கள் மனதிலே இருத்திக்கொள்ளுங்கள். **இப்பொழுது கிடைக்கும் பலன் அல்ல; இனிவரும் பலன்.** இப்பொழுது கிடைக்கும் உடனடி பலன் அல்ல, இனிவரும் பலன். இன்னொன்று **இனிவரும் பலன் அல்ல; மற்றவர்கள் பெறும் பலன்.** மற்றவர்கள் பெறும் பலனும், இனிவரும் பலனும் ஒன்றோடொன்று சேர்ந்தேதான் இருக்கும். நான் பெறும் பலனும், உடனடி பலனும் ஒன்றோடொன்று சேர்ந்துதான் இருக்கும். உடனடி பலன் என்றால் யாருக்குக் கிடைக்கும் பலன்? நான் பெறுகிற பலன். இனிவரும் பலன் என்றால் அது யார் பெறுகின்ற பலன்? அதை நான் பெறமாட்டேன். மரம் நான் வைத்தேன்; அதன் பழத்தை நான் சாப்பிடமாட்டேன். யார் சாப்பிடுவார்? என்னுடைய பிள்ளைகள்கூட சாப்பிடாது. என்னுடைய பிள்ளைகளின் பிள்ளைகள் சாப்பிடலாம். சாப்பிடும்போது கண்டு களிகூருவதற்கு நான் இருக்க மாட்டேன். உயர்ந்த ஒரு சமுதாயத்திற்கும், தாழ்ந்த ஒரு சமு தாயத்திற்கும் உள்ள வேறுபாடு அது எப்படிப்பட்ட மனிதர்களால் நிறைந்திருக்கிறது என்பதைப் பொறுத்தது. இனிவரும் பலனைக் காண்கின்ற சமுதாயம் உயர்ந்த சமுதாயம். உடனடி பலனையே கருத்தாய்க் கொண்டு வாழ்கின்ற சமுதாயம் தாழ்ந்த சமுதாயம். உயர்ந்த சமுதாயத்திற்கும், தாழ்ந்த சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடு இதுதான்.

எசேக்கியா ஒரு தாழ்ந்த சமுதாயத்தை உருவாக்கினான். ஆபிரகாமை கர்த்தர் அழைத்தார். ஆபிரகா மின் அண்ணன் மகன் இருந்தான். அவன் பெயர் லோத்து. இந்த உலகத்தோடு பின்னிப்பிணைந்திருக் கிற சமுதாயத்தைவிட்டு கர்த்தர் நம்மை வேறுபிரித்து எடுக்கிறார். அது என்னவென்றால் நாம் பாவத் திலிருந்து மட்டும் இரட்சிக்கவில்லை. நாம் இந்த உலகத்திலிருந்து மீட்கப்படுகிறோம். உலகத்தி லிருந்தும் இரட்சிக்கப்படுகிறோம். இது சில கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருக்கும். "மாறு பாடுள்ள இந்தச் சந்ததியைவிட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்," என்று (அப் 2:40) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற மக்களுக்கு பேதுரு சொல்கிறார். "மாறுபாடுள்ள இந்தச் சந்ததியைவிட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்". "Save yourself from this crooked generation".

"ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போல் பிரகாசிக்கிற கோணலும் மாறு பாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளை களுமாயிருங்கள்" (பிலி. 2:14, 15) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.

இந்தச் சந்ததி அல்லது இந்தத் தலைமுறை "கோணலும் மாறுபாடுமான சந்ததி அல்லது உலகம்" என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. எப்படி? ஆணும் பெண்ணும் திருமணம் செய்தால் அது திருமணம். ஆணும் ஆணும் கலந்துகொண்டாலும் அதற்குப் பெயரும் திருமணம்தான் என்று இந்தச் சந்ததி மிக இலகுவாகப் பேசுகிறது.

"இது கிறிஸ்துவுக்கு ஒத்தது. இது கிறிஸ்துவுக்கு ஒவ்வாதது," என்று திட்டவட்டமாகக் கோடு போடுகிற அறிவு தேவனுடைய மக்களாகிய நமக்கு இருக்க வேண்டும். "இது கிறிஸ்துவுக்கு உரியது; இது கிறிஸ்துவுக்கு உரியதல்ல. இது கிறிஸ்துவுக்கு ஒத்தது; இது கிறிஸ்துவுக்கு ஒவ்வாதது. இது ஆவிக்குரி யது; இது மாம்சத்திற்குரியது," என்பதை இனம்பிரிக்கிற அறிவு தேவனுடைய மக்களாகிய நமக்கு அவசியம்.

## ஆபிரகாமும், லோத்தும்

லோத்து ஆபிரகாமோடேகூடப் போனான். இந்த உலகத்தைவிட்டு வேறுபிரிக்கப்படுவதென்றால் என்ன அர்த்தம் என்பதற்கு ஆபிரகாம் ஒரு உதாரணம். "நீ உன் ஊரிலேயே இருந்துகொள். உன் மாமா, மச்சான், பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா எல்லாரும் கூடஇருப்பார்கள். அங்கே உட்கார்ந்து நீ ஒரே தேவனை வழிபடு," என்று சொன்னால் மற்ற எல்லாரும் கற்களையும், மண்ணையும் வழிபட்டுக்கொண்டிருப்பார்கள். ஆபிரகாமுக்கு மட்டும் கோயிலே இருக்காது. "நான் ஒரே தேவனை வழிபடுகிறேன். இது ஆண்டவருக்குத் தெரியும்," என்று சொல்லிக்கொண்டு அவர் அந்தக் கூட்டத்தோடு வாழ முடியாது. அப்படி உன்னை அந்தக் கூட்டத்திலே வைத்து ஒரே தேவனை வெளிப் படுத்த முடியாது. நீ இந்த கூட்டத்தைவிட்டு பௌதீகமாக வெளியே வா. நன்றாக கவனிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டிலே தேவன் அப்படி பௌதீகமாக வெளியே வர சொல்வதில்லை. ஆனால், எது நம் முடைய சமுதாயமாக இருந்ததோ அதைவிட்டு உள்ளான விதத்திலே வெளியே வந்துவிட வேண்டும்.

ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரை இயேசுகிறிஸ்துவே அவனுடைய நாடு. இயேசுகிறிஸ்துவே அவ னுடைய ஜாதி. இயேசுகிறிஸ்துவே அவனுடைய மொழி.

அமெரிக்காவிலே தமிழ் பேசுகிற ஒருவரைக் கண்டால், "நீங்களும் தமிழா? நானும் தமிழ்தான்" என்று அப்படியே கட்டிப்பிடித்துக்கொள்ள மாட்டோம். சென்னையிலே ஒருவரைப் பார்க்கும்போது, "உங்க ளுக்கு எந்த ஊர்? அந்த ஊரா? எனக்கும் அந்த ஊர்தான்," என்று உடனே கட்டிப் பிடித்துக்கொள்ள மாட்டோம்.

ஒரு பாடல் உண்டு:

என் வீடு நீர், என் நாடு நீர்,
என் தேடலும் நீரே.
என் சாய்வு நீர், என் ஓய்வு நீர்,
என் ஆய்வும் தீர்வும் நீரே

என்ற இந்த வரிகளை நான் மிகவும் பாராட்டுகிறேன். என்னுடைய மொழி நீர், என்னுடைய நாடு நீர், என்னுடைய ஜாதி நீர். கிறிஸ்து ஒருவரைத்தவிர வேறு எந்த அடையாளத்தையும் நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

நம் ஊரிலே ஜாதி எவ்வளவு பலம் வாய்ந்தது தெரியுமா? தேவனுடைய மக்களாகிய நாம் எல்லா வற்றையும் விட்டு வெளியே வந்துவிட்டோம்.

ஆபிரகாம் இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்ததுபோல, லோத்து இந்த உலகத்தைவிட்டுப் பிரியவில்லை. ஒரு கட்டத்திலே ஆபிரகாமினுடைய மேய்ப்பருக்கும், லோத்துவினுடைய மேய்ப்பருக்கும் இடையே தகராறு வரும்போது ஆபிரகாம் லோத்துவிடம், "நாம் சகோதரர்கள். என்னுடைய மேய்ப்பருக்கும் உன்னுடைய மேய்யப்பருக்கும் எப்போதும் சண்டை சச்சரவு இருக்கக்கூடாது. நாம் பிரிந்திருக்கடவோம். வாய்ப்பை நான் உனக்கு முதலில் உனக்கே தருகிறேன். நீ எந்த இடத்திற்குப் போக விரும்புகிறாயோ அதை நீ தெரிந்துகொள். அந்த இடத்திற்கு நான் வரமாட்டேன். என்னுடைய மேய்ப்பர்களோ என் னுடைய ஆடுமாடுகளோகூட வராது. நீ தெற்கே போனால் நான் வடக்கே போகிறேன். நீ வடக்கே போனால் நான் தெற்கே போகிறேன்," என்று சொல்லுகிறார். லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து யோர்தான் ஓடுகிற சமவெளி அருகே பச்சைப்பசேல் என்று இருந்த சோதோம் கொமோரா என்ற சுபிட்சமான பட்டணங்களை அவன் தெரிந்தெடுத்துக்கொள்கிறான்.

அவன் பிரிந்துசென்றபிறகு தேவன் அவனிடம் தரிசனமாகப் பேசுகிறார். "உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன்," என்றார் (ஆதி. 13:13-17).

தேவனைப் பின்பற்றுவதற்காக எப்போதெல்லாம் இந்தப் பூமியிலே ஒன்றை நாம் இழக்கிறோமோ, தேவனை பின்பற்றுவதற்காக எப்போதெல்லாம் ஒன்றை நட்டப்படுத்துகிறோமோ அப்போதெல்லாம் தேவன் தம்முடைய இருதயத்தைத் திறந்து காண்பிப்பார்.

ஆபிரகாம் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான். லோத்து உடனடியாக வரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான். ஆபிரகாம் ஒருநாளும் *கன்னலும் தேனும் கனியும் இன்பாலும்* விளைகின்ற ஒரு பூமியிலே அவர் வாழவில்லை. அவன் கடைசிவரை கூடாரவாசியாக இருந்தான். நகரம் என்பது நிலையான ஒரு வீட்டைக் கட்டி வாழ்வது. ஆபிரகாமுடைய வாழ்க்கை நிலையான ஒரு நகரத்திலே, நிலையான ஒரு வீட்டைக் கட்டி வாழ்ந்தது இல்லை. அவருடைய வாழ்க்கை *கூடாரத்தின் வாழ்க்கை, பலிபீடத்தின் வாழ்க்கை* என்று எழுதியிருக்கிறது. நகரம் என்றால் நமக்கு ஜாதி ஜனம் இருக்கும். ஒரு கஷ்ட நஷ்டமென்றால் உடனே மக்கள் ஓடி வருவார்கள். கூடாரம் என்றால் எங்கு போனாலும் நாம் யாராகத்தான் பார்க்கப்படுவோம்? அந்நியனாகவும் பரதேசியாகவும்தான் நாம் பார்க்கப்படுவோம். எனவே, நகர வாழ்க்கை என்பது பாதுகாப்பான வாழ்க்கை. ஒரு அவசரத்திற்கு மருத்துவமனைக்குப் போகலாம். பக்கத்திலே கடைகள் இருக்கும். கூடார வாசிகளுக்கு அப்படிப்பட்ட ஜாதி ஜனங்களுடைய ஆதரவு இருக்காது. நீங்கள் மனம் புண்பட்டுவிட வேண்டாம். "பிரதர், இருக்கிறதே இரண்டு மூன்று சொந்தக்காரர்கள். அவர்களையும் வெட்டிவிட வேண்டும் என்று சொல்கிறீர்களே!" என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அதை நான் சொல்லவில்லை. ஆனால் "இவன் வெட்டிவிடக் கூடிய ஆள்," என்று நம்முடைய சொந்தக்காரர்களுக்குத் தெரிய வேண்டும். இவன் வெட்டிவிடவில்லை. ஆனால் வெட்டிவிடு வதற்குத் தயாராக இருக்கிறான்.

உடனடியாக வரும் பலன்...எனக்கும் என்னுடைய மனைவி மக்களுக்கும் ஒரு நல்ல நாடு, நல்ல நகரம், நல்ல வீடு.

**லோத்து – உடனடி பலன்மேல் நோக்கமாயிருத்தல்**

தேவன் வாக்குறுதிசெய்த பெரிய தேசத்தை ஆபிரகாம் எப்போது சுதந்தரித்துக்கொண்டான்? லோத்து உடனடியாகச் சுதந்தரித்துக்கொண்டான்? யோர்தான் பாய்ந்தோடுகிற சமவெளியருகே பச்சைப்பசேல் என்றிருந்த நகரங்களை அவன் தெரிந்துகொண்டான். ரொம்ப அருமையான வாழ்க்கை. "கர்த்தர் எங்களை ஆசீர்வதித்தார் பிரதர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நாங்கள் பட்ட பாடுகளுக்கெல்லாம் கர்த்தர் எங்களை ஆசீர்வதித்தார் பிரதர். என் மகன் பொறியியல் படித்துவிட்டான். என் மகள் டாக்டராகி விட்டாள். மருமகள் அந்த ஊரிலே இருக்கிறாள். மருமகன் இந்த ஊரிலே இருக்கிறான். நான் வீடு கட்டிவிட்டேன். நான் ஒரு பரதேசியாய் கையும் கோலுமாய் இந்தச் சென்னைக்கு வந்தேன். இப்பொழுது இந்த பரிவாரத்தை உடையவனானேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!" என்று யார் சாட்சி கொடுத்திருப்பார்? லோத்து. கிறிஸ்தவர்கள் என்று நினைத்துவிடாதீர்கள். அது லோத்துவினுடைய சாட்சி. "கர்த்தருக்காக கல்தேயர் என்கிற ஊரைவிட்டு நாங்கள் வந்தோம். அங்கு நல்ல வீட்டிலே இருந்தோம். நாங்கள் நடந்து நடந்து கூடாரங்களிலே வாசம் பண்ணினோம். கர்த்தர் ஒரு நிலையான வீட்டைத் தந்தார்," என்று லோத்து சாட்சி சொல்லலாம், சொல்லியிருப்பார்.

இது ஆசீர்வாதமா? லோத்து நீதிமானா, அநீதிமானா? நீதிமான் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்கிறார். "நீதிமானாகிய லோத்து தன் இருதயத்திலே வாதிக்கப்பட்டான்," (2 பேதுரு 2:8) என்று பேதுரு லோத்தைப்பற்றி எழுதுகிறார். சோதோம் கொமோரா நல்ல பட்டணங்கள் இல்லை. ஆனால் அந்த மக்களுடைய அநீதியான, ஒழுக்கமில்லாத வாழ்க்கையைபார்த்து லோத்து தன்னுடைய இருதயத்திலே வாதிக்கப்பட்டார். ஆனால் உடனே, "இந்தப் பட்டணத்தில் நாம் வாழவே கூடாது. நான் ஏன் என் சித்தப்பா ஆபிரகாமைவிட்டுப் பிரிந்துவந்தேன். இனிமேல் அவரோடே சேர்ந்து பயணம் செய்வோம்," என்று அவர் தீர்மானிக்கவில்லை, செயல்படவும் இல்லை.

அதற்குக் காரணம், திருமதி லோத்து ரொம்ப பலமான நபர். சோதோம் கொமோராவிலே நிறைய சமூக வட்டங்கள் உண்டாயிற்று. அதைவிட்டு வருவதற்கு அவள் முன்வரவில்லை. அவர்கள் பண்டிகை கொண்டாடுவார்கள். பண்டிகை கொண்டாடும்போது பக்கத்தில் இருக்கிற நபர்களுக்கெல்லாம் பண்டங்கள் பரிமாறிக்கொள்வார்கள். லோத்து ரொம்ப வசதி படைத்த மனிதன். அதனால் அவனுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். லோத்துவினுடைய நண்பர்கள் இல்லை. ஆனால் திருமதி லோத்துவிற்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். பெரிய பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கெல்லாம் திருமதி லோத்துவைத்தான் கூப்பிட்டார்கள். இதெல்லாம் என்னுடைய பரிசுத்த கற்பனை.

ஆனால் லோத்துவின் மனைவி பெரிதாக ஒன்றும் தவறு செய்யவில்லை. அவருடைய இருதயம் சோதோம் கொமோராவிலே லயித்து இருந்தது.

ஒருநாள் சோதோம் கொமோராவினுடைய பாவம் வானம்வரை எட்டினபோது இரண்டு தூதர்களும் இயேசுகிறிஸ்துவும் இறங்கி வந்தார்கள். யார் தூதர்கள், யார் கர்த்தர் என்று ஆபிரகாமால் இனங்காண முடியவில்லை. ஆபிரகாமினுடைய வீட்டு வழியாக, கூடாரம் வழியாகத்தான் அவர்கள் கடந்து போனார்கள். ஆபிரகாம் "கொஞ்சம் வந்து இளைப்பாறிவிட்டுப் போங்கள்," என்று சொல்கிறார். இளைப்பாறுவதற்காக வருகிறார்கள். நல்ல உணவு சமைத்துக் கொடுக்கிறார். தான் என்ன நோக்கத்திற்காக இறங்கி வந்தாரோ அந்த நோக்கத்தைச் சொல்லாமல் கர்த்தரால் இருக்க முடியவில்லை. ஆபிரகாம் கர்த்தர்மேல் வைத்திருந்த அன்பினாலும், விசுவாசத்தினாலும் இந்த உலகத்தைத் துறந்து, இழந்து கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினார். சோதோம் கொமோராவை அழித்துவிடுவேன் என்று கர்த்தர் சொன்னபோது அவன் கர்த்தரோடு பரிந்துபேசுகிறான். சோதோம் கொமோராவிலே நிச்சயமாக நீதிமான்கள் சிலபேர் இருப்பார்கள் இல்லையா? கர்த்தரோடு ஒரு பேரம் பேசி "50 பேர் இருந்தால், 45 பேர் இருந்தால், 40 பேர் இருந்தால், 30 பேர் இருந்தால், 20 பேர் இருந்தால், 10 பேர் இருந்தால்..." என்று பரிந்துபேசுகிறான். எத்தனைமுறை ஆபிரகாம் கர்த்தரோடு பேரம் பேசினார் என்று கண்டுபிடியுங்கள். கடைசியாக எத்தனை பேர் என்று சொல்கிறான்? ஐந்து. ஐந்து நீதிமான்கள் இருந்தால் லோத்து, அவன் மனைவி, மகள்கள், இரண்டு மகள்களுக்கு மருமகன்கள். குறைந்தது மொத்தம் ஆறுபேராவது அந்த ஊரிலே நீதிமான்களாக இருந்திருப்பார்கள் என்பது ஆபிரகாமின் கணக்காக இருந்திருக்கலாம். எனவே, "பத்துப்பேர் என்று சொல்லுவோமே!" என்று சொல்லியிருக்கலாம்.

ஒரு மனிதன் நீதமான் அல்லது அவனது பிள்ளைகள் நீதிமான்கள் என்று எப்படி விளங்கும்? மருமக்களைத் தெரிந்துகொள்வதிலிருந்து தெரிந்துகொள்வோம். "என் பிள்ளைகள் நீதிமான்கள். என் மருமக்கள் அநீதிமான்கள், ஒழுக்கமற்றவர்கள்," என்றால் நிச்சயமாக நான் நீதிமான் இல்லை.

பத்து நீதிமான்கள் அங்கு இல்லை. ஆகவே, கர்த்தர் அக்கினியை இறக்கி சோதோம் கொமோராவை அழிக்கிறார். கர்த்தர் பட்டணங்களை அழிக்கப்போவதை லோத்து தன்னுடைய பிள்ளைகளிடத்திலே சொல்கிறார்; தன்னுடைய மருமக்களிடத்திலே சொல்கிறார். "கர்த்தர் அழிக்கப் போகிறார், பட்டணத்தை விட்டு ஓடிவிடுவோம்," என்றவுடன் அவர்கள் சிரிக்கிறார்கள், பரியாசம் பண்ணுகிறார்கள். "வரப்போகிற தாம். சென்னையே அழிந்துவிடப்போகிறதாம். நியூயார்க்கே அழிந்துவிடப்போகிறதாம்," என்று கிண்டல் செய்கிறார்கள். *மூழ்காத அல்லது மூழ்கடிக்கமுடியாத கப்பல்* என்று எந்தக் கப்பலைச் சொன்னார்கள் தெரியுமா? மூழ்கிப்போய் பல நூறுபேர் மரித்தார்களே! டைடானிக் கப்பல்...அந்தக் கப்பலைத்தான் *மூழ்காத அல்லது மூழ்கடிக்கமுடியாத கப்பல்* என்று சொன்னார்கள். அதுபோல அழிக்கமுடியாத நக ரங்கள், எட்டமுடியாத கோபுரங்கள் என்று மனிதர்கள் கட்டிக்கொண்டே போகலாம்.

கடைசியாக கர்த்தர் பலாத்காரமாக லோத்துவையும், அவன் மனைவி மக்களையும் சோதோம் கொமோராவிலிந்து வெளியே இழுத்துக்கொண்டு போகிறார் அப்பொழுதுங்கூட திருமதி. லோத்துவால் ஓடிவர முடியவில்லை. அவர் ஓடிவந்தபோது அவருடைய இருதயமெல்லாம் அந்தப் பட்டணத்திலும், அங்கிருந்த சொந்தபந்தங்களிலும், சொத்துக்களிலுமே இருந்தது. அவள் திரும்பிப்பார்கிறாள்; திரும்பிப் பார்த்து உப்புத் தூணானாள் என்று எழுதியிருக்கிறது. ஏதோ ஒரு தூணாக மாறிவிட்டாள். அவளால் அதற்கு மிஞ்சிப் போகமுடியவில்லை. உடனடியாக வரும் பலன்.

## ஆபிரகாம் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான்

ஆபிரகாம் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான். அவன் தன் வாழ்நாளில் பலனைப் பெற வில்லை. "*விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் பரதேசியைப்போல சஞ் சரித்து. அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூடாரங் களிலே குடியிருந்தான். ஏனெனில், தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென் றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்... இவர்க ளெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடு மரித்தார்கள்*" (எபி. 11:8-11, 13).

இவர்ளெல்லாரும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையவில்லை. சிலர், "இது என்ன விசுவாசம்? கர்த்தரிடத்தில் 'ஆண்டவரே நீர் வாக்குத்தத்தம் பண்ணினீர். ஆகையால் அதைத் தருவீர், தந்துவிட்டார், அல்லேலுயா! அப்படித்தானே ஜெபிக்கவேண்டும். அவர் ஒரு வாக்குறுதி பண்ணினால், அதை அடையாமல்போகிற ஒரு வாழ்க்கை தோற்றுப்போன வாழ்க்கை இல்லையா?" என்று சொல் வார்கள். ஆனால், "*இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே கண்டு, அவைகளை நம்பி அணைத்துகொண்டு, பூமியிலே தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவாகள் சுயதேசத்தை நாடிப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்க்கு அவர்களுக்குச் சமயங் கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள் ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படவில்லை*" (எபி. 11:13-16).

தேவன் தம்மை ஆபிரகாமின் தேவன் என்று சொல்ல வெட்கப்படவில்லை. ஆனால் தேவன் தம்மை லோத்தினுடைய தேவன் என்று சொல்ல ஒருவேளை வெட்கப்படலாம். ஏனென்றால், அவன் பரம தேசத்தை நாடவில்லை. இதுதான் நான் சொல்ல விரும்பின ஒரேவொரு குறிப்பு. தேவனுடைய மக்கள் உடனடியாக வரும் பலன்மேல் அல்ல, இனி வரும் பலன்மேல் நோக்கமாயிருப்பவர்கள்.

## இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்

வாலிபர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். "நான் ஒன்றும் அப்படி பெரிய வேலையெல் லாம் கர்த்தருக்காகச் செய்யவில்லை," என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நீங்கள் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருப்பவர்கள் என்றால் இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையை நீங்கள்

செப்பனிடுவீர்கள், பன்படுத்துவீர்கள். “நான் என்ன செய்ய முடியும்? நான் கல்லூரிக்குப் போகிறன் அல்லது வேலைக்குப் போகிறேன். எங்கள் வாழ்க்கை 24 மணிநேரமும் பரபரப்பாகப் போய்க்கொண்டிருக்கிறது. கல்லூரிக்குப் போகும்போது நான் செய்வதற்கு ஒன்றும் இல்லை. கல்லூரியே எல்லாவற்றையும் செய்துவிடுகிறது. குடைராட்டினம் சுற்றுவதுபோல சுற்றிவருகிறோம். வேலைக்குப்போன பிறகுதான் நேரம் கிடைக்கும். அப்போது நான் என் வாழ்க்கையைப் பண்படுத்துவேன்,” என்று என்று நீங்கள் நினைக்கலாம். வேலைக்குப் போய் பாருங்களேன். அப்போது, “கல்லூரியில் படித்தபோதாவது கொஞ்சம் நேரம் கிடைத்தது. வேலைக்குப் போகும்போது நேரமே கிடைக்கவில்லை,” என்று சொல்வீர்கள். அப்புறம் திருமணம் செய்வீர்கள். திருமணம் செய்தவர்களிடம், “எவ்வளவு நேரம் கிடைக்கிறது?” என்று கேட்டுப்பாருங்கள். “பிரதர், கல்லூரியில் படித்த நாட்கள்தான் பரலோகம். வேலைக்குப் போகிற நாள் ஓரளவு பரலோகம்தான். ஆனால், கல்யாணம் பண்ணினபிறகு நம்முடைய நேரம் நமக்குக்கூடச் சொந்தமில்லை. அவருக்குப் பதில் சொல்லவேண்டும். இவருக்குப் பதில் சொல்ல வேண்டும். இன்னொரு ஆளுக்குப் பதில் சொல்ல வேண்டும்,” என்பார்கள்.

எனவே, உங்கள் வாலிபம் தொடங்கி உங்கள் வாழ்க்கையைப் பண்படுத்துங்கள். “*என் மகனே, எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்*” (நீதி. 4:23) “அங்கே போய் கூட்டம் நடத்துங்கள். இங்கே போய் கூட்டம் நடத்துங்கள். அதைச் செய்யுங்கள், இதைச் சாதியுங்கள்,” என்று சொல்லவில்லை. ஆனால், இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருக்கிறவன் தன்னைப் பண்படுத்துவதையும், பழக்குவிப்பதையும் எங்கு ஆரம்பிக்கிறான் என்றால் தன்னுடைய இருதயத்திலிருந்து ஆரம்பிக்கிறான்.

இருதயத்தை காத்துக்கொள்வது, இருதயத்தைப் பண்படுத்துவது என்றால் என்ன பொருள்? “எதை நாம் விரும்புகிறோம்? எதை நாம் விரும்பவில்லை? நம்முடைய நேரத்தை நாம் எப்படிச் செலவிட விரும்புகிறோம்? எப்படிப்பட்ட நபர்களோடு நாம் நேரத்தைச் செலவிட விரும்புகிறோம்? என்னென்ன செயல்பாடுகளில் நம் நேரத்தைச் செலவிட விரும்புகிறோம்? என்னென்ன பொருள்களை நாம் விரும்புகிறோம்?” என்று எல்லா விதத்திலும் நம் இருதயத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும். துணிமணிகளைக்கூட நான் சொல்வேன். நான் தருகின்ற தரத்தை நீங்கள் பின்பற்ற வேண்டாம். ஆனால் நான் சொல்கிறேன். குறைந்த எண்ணிக்கையில் துணிகள் இருந்தால் போதும். துவைத்துப்போட்டு நாம் உடுத்திக்கொள்ளலாம். நான் இதைச் சட்டமாகவோ அல்லது கர்த்தர் உங்களுக்கு சொல்கிறதாவது என்றோ நான் சொல்லவில்லை. “அது முடியாது” என்று நீங்கள் நினைக்க வேண்டாம். உங்கள் இருதயத்தை நீங்கள் அப்படிப் பழக்குவியுங்கள், பண்படுத்துங்கள். பணமே இல்லையா? ரொம்ப சந்தோஷம்.

எஸ்றாவைப்பற்றி வேதாகமத்தில் ஒரு வார்த்தை எழுதியிருக்கிறது. எசேக்கியாவின் நான்கு ஐந்து தலைமுறை கழித்து எக்கோனியாவின் கண்ணைக் குருடாக்கி, அவன் பிள்ளைகளையெல்லாம் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனார்கள். அங்கே அவர்கள் எழுபது வருடம் அடிமைகளாக வாழ்ந்தார்கள். அடிமைகளாக இருந்தாலும் அவர்களுக்குப் பாபிலோனின் வசதிகள் எல்லாம் பிடித்துப்போயிற்று. அதற்குப்பிறகு “நாம் எருசலேமுக்குப் போவோம்” என்று சொன்னபோது “வரமாட்டேன்” என்று சொன்னார்கள். “இங்கேயே நல்லா இருக்கிறது. பலசரக்கு அங்காடி, எல்லா வசதிகளும் இருக்கின்றன. எருசலேமில் என்ன இருக்கும்? அங்கே வெறும் குப்பைக் கூளங்கள்தான் இருக்கும். Non Resident Jewsஆக நாங்கள் பாபிலோனிலேயே வாழ்ந்துகொள்கிறோம்,” என்று சொன்னார்கள். ஆனால், ஒரு சில மக்கள் எருசலேமுக்குத் திரும்பினார்கள். இது தேவனுக்கு அவசியம் என்று எருசலேமுக்குத் திரும்பின மக்களோடு வந்தவன்தான் எஸ்றா. திரும்பின மக்களுக்கு எப்படி தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கை வாழவேண்டும் என்று தெரியவில்லை. விக்கிரகாராதனை செய்கிற ஒரு நகரத்திலே, நாட்டிலே 75 வருடம் வாழ்ந்தால் அவர்களுக்குக் கடவுளைப்பற்றி என்ன அறிவு இருக்கும்? ஒன்றும் பெரிதாக இல்லை. கடவுளைப்பற்றி ஒரு இருதயம் இருந்தது. ஆனால், அப்படியொன்றும் பெரிய அறிவு இல்லை. எஸ்றா அவர்களுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதித்தான். எஸ்றா அவருடைய வார்த்தையைப் படிக்கவும், பயிற்சிசெய்யவும், போதிக்கவும் தன்னுடைய இருதயத்தை பழக்குவித்திருந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. “*எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரயேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களை உபதேசிக்கவும் தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான்*” (எஸ்றா 7:10). “Ezrah had prepared and set his heart to seek the law of the Lord and to do, and teach in Israel its statutes and its ordinances”.

என்றைக்கு இந்தப் பலன் கிடைக்கும் என்று என்னால் சொல்ல முடியாது. உங்கள் இருதயத்தின் சாய்வுகளை நீங்கள் தயவுசெய்து சீர்படுத்துங்கள். வேலைக்குப்போனபிறகு, கல்யாணம் பண்ணின

பிறகு, பிள்ளைகளைப் பெற்றபிறகு எப்படிப்பட்ட வாழ்க்கை வாழப் போகிறோம் என்பது எங்கு தீர் மானிக்கப்படுகிறது? நம்முடைய இளவயதிலே நம்முடைய இருதயத்தின் சாய்வுகளை எப்படிச் சீர் படுத்துகிறோம் என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். இளவயதிலே நம்முடைய சாய்வுகளை நாம் சரிசெய்ய வேண்டும்.

நான் ஒரு சகோதரனுடைய பாடலை மீண்டும் சொல்கிறேன்.

என் வீடு நீர், என் நாடு நீர்,
என் தேடலும் நீரே.
என் சாய்வு நீர், என் ஓய்வு நீர்,
என் ஆய்வும், தீர்வும் நீரே.

*சாய்வு நீர்* என்றால் என் இருதயம் எப்போதும் உம்மை நோக்கிச் சாய்ந்திருக்கிறது என்ப்று பொருள். எஸ்றா தன் இருதயத்தை என்றைக்குப் பக்குவப்படுத்தினார்? பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிவந்தபிறகு தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்கு ஒரு ஆள் தேவைப்பட்டது. உடனே அவர் ஒரு concordance bible வாங்கினாரா? ஒரு நல்ல mac book ஒன்று வாங்கினாரா? அதிலே அவர் செய்திகளையெல்லாம் தேடித்தேடி தயார்செய்ய ஆரம்பித்துவிட்டாரா? அப்படியா? இல்லை. எங்கு பழக்கப்பட்டிருந்தான் என்று வேதாகமத்தில் எழுதப்படவில்லை. ஆனால், அவன் தன் இருதயத்தை இளவயதுமுதற் பக்குவப்படுத்தியிருந்தான். For long years he prepared his heart. எஸ்றா எருசலேமுக்கு வரும்போது 40 அல்லது 50 வயது இருக்கலாம். ஆனால், 50 வயதில் பெறுகிற பலனுக்காக அவன் தன் இளவயதுமுதல் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். தேவனுடைய வார்த்தையை ஆராயவும், அதின்படி செய்யவும், அதைப் போதிக்கவும் எஸ்ரா தன்னுடைய இருதயத்தை பக்குவப் படுத்தியிருந்தான்.

நம்முடைய பிள்ளைகளெல்லாம் 16 வயதிலே ஒன்றும் கெட்டுப்போவதெல்லாம் கிடையாது. அவர்கள் எப்படிப்பட்ட மனிதர்களாக உருவாகப் போகிறார்கள் என்பதற்குரிய விதை எப்போது விதைக்கப்படு கிறது? அருமையான சகோதர சகோதரிகளே, பிலிப்பியர் 2 அதிகாரத்திலே பவுல் தீமோத்தேயுவைப் பற்றிச் சொல்லுகிற சில வசனங்களை நான் மேற்கோள் காட்டி முடித்துவிடுகிறேன். “*உங்கள் காரியங் களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் தீமோத்தேயுவேயன்றி வேறொரு வனும் என்னிடத்தில் இல்லை. மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்*”.

எப்படி உடன்வரும் பலன் நோக்கமாயிராமல் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருப்பது? தேவனுடைய மக்கள் உடனடியாக வரும் பலன்மேல் நோக்கமாயிராமல் இனி வரும் பலன்மேல் நோக்கமாயிருப் பவர்கள். அதுபோல அவர்கள் தனக்குக் கிடைக்கும் பலன்மேல் நோக்கமாயிராமல் பிறருக்கு, மற்றவர் களுக்குக் கிடைக்கும் பலன்மேல் நோக்கமாயிருப்பவர்கள். இது தேவனுடைய மக்களுடைய ஒரு குணம்.

‘தனக்கு மிஞ்சிதான் தானதர்மம்,” என்று இந்த உலகம் சொல்லும், “நாளைக்குக் கிடைக்கும் பலாக் காயைவிட இன்றைக்குக் கிடைக்கும் கலாக்காய் நல்லது,” என்று இந்த உலகம் சாதிக்கும். இனிவரும் பலனைவிட உடனடியாக வரும் பலன்தான் மேல் என்று வாதிடும். இன்று குலுக்கல் நாளை லட்சாதிபதி என்பதெல்லாம் பழைய காலம். இன்று குலுக்கல் இன்றே லட்சாதிபதி என்பதுதான் இன்றைய வாதம். “எனக்கு 40 வயதிலே என்ன பலன் கிடைக்கும்? 80 வயதிலே என்ன பலன் கிடைக்கும்? என்னுடைய தலைமுறைகளுக்கெல்லாம் என்ன பலன் கிடைக்கும்” என்பதெல்லாம் இன்று பெரும்பாலும் செல்லு படியாகாது.

அதற்காக நாம் நம்மைக் கவனித்துக்கொள்ளக்கூடாது என்று நான் சொல்லவில்லை. தேவனுடைய மக்களுடைய இருதயம் விசாலமாக இருக்க வேண்டும். அதே பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்திலே, “*கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது*,” என்று பவுல் சொல்கிறார். அது என்ன சிந்தை? “*அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக*”. பவுல் வாழ்ந்த காலத்திலேயே தேவனைச் சேவித்த, கிறிஸ்துவைச் சேவித்த, மக்களிடையேகூட அப் படிப்பட்ட ஒரு இருதயத்தைக் காண்பது அரிதாக இருந்தது. அதனால்தான் தீமோத்தேயுவைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. “*மற்றவர்களெல்லாரும் கிறிஸ்துவுக்குரியவைகளல்ல தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்*,” என்று இயேசுகிறிஸ்துவை அறியாத மக்களைப்பற்றியோ, இயேசுகிறிஸ்துவை சேவிக் காத மக்களைப்பற்றியோ பவுல் எழுதவில்லை. இயேசுகிறிஸ்துவை அறிந்த, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற, இயேசுகிறிஸ்துவை சேவிக்கிற மக்களைப்பற்றியே அவர் எழுதுகிறார். அவர்களுடைய

தேவன் அவர்கள் வயிறு. அவர்கள் சிலுவைக்கு பகைஞர். இன்றைக்கும் தேவனுடைய மக்களிலே பலருக்கு அவர்கள் தேவன் அவர்கள் வயிறு. வயிறு என்றால் நான் சாப்பாட்டைச் சொல்லவில்லை. இந்த உலகத்திற்குரிய காரியங்கள். இந்தப் பூமிக்குரிய காரியங்கள். "இங்கே செல்வாக்காக இருக்க வேண்டும். இங்கே செழிப்பாக இருக்க வேண்டும். வயிற்றுக்குக் கிடைக்க வேண்டும். கார் இருக்க வேண்டும். மின்விசிறி இருக்க வேண்டும். குளிர்சாதனப் பெட்டி இருக்க வேண்டும். இன்னும் கொஞ்சம் சொத்து சுதந்தரமெல்லாம் இருக்க வேண்டும். பாதுகாப்பு இருக்க வேண்டும். நல்ல சமூக வட்டம் இருக்க வேண்டும். அந்தப் பேராசியர் என் மாமா. அந்தக் கல்லூரி முதல்வர் என் அண்ணனோடு படித்தவர். அந்த அலுவலகத்தில் அந்த ஆ்.பீசர் என் அத்தைதான்," என்று சொன்னால்தான் அவர்கள் மனதிலே ஒரு நிறைவு இருக்கும்.

நமக்கு யாரையும் தெரியாது. நாம் வெறுமனே வல்லமையில்லாத மக்கள். அல்லேலூயா! *1* கொரிந்தியர் 1ஆம் அதிகாரத்தின்படி, *உங்களில் அநேகர் ஞானிகள் இல்லை. உங்களில் அநேகர் சாமர்த்திய சாலிகள் இல்லை. வல்லவர்கள் அநேகரில்லை. பிரபுக்கள் அநேகரில்லை. தேவன் இந்த உலகத்திலே உள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி இல்லாதவைகளையும், உலகத்திலே அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இழிவாய் எண்ணப்பட்டவைகளையும் தெரிந்துகொண்டார்.* நாம் அந்த வகையைச் சேர்ந்தவர்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

"நான் எனக்குரியவைகளைப்பற்றி அக்கறைப்படாமல் மற்றவர்களுக்குரியவைகளைப்பற்றி அக்கறைப்பட்டிருந்தால் என்னுடைய வாழ்க்கை செழிப்பாக இருக்குமா?" என்ற கேள்வி எழும். தேவனுடைய கோட்பாட்டின்படி நிச்சயமாக செழிப்பாக இருக்கும். "*எவன் நீர்பாய்ச்சுகிறானோ அவனுக்கு நீர் பாய்ச்சப்படும்; கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்*". தேவனைக்குறித்தும், தேவனுடைய காரியங்களைக்குறித்தும், தேவனுடைய மக்களைக்குறித்தும் அக்கறையுள்ளவர்களாக இருங்கள். தேவன் உங்களைக்குறித்து அக்கறையுள்ளவர்களாக இருப்பார். இதை நான் ஒரு மந்திரம்போலச் சொல்லவில்லை. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இதை ருசித்துப்பாருங்கள். தேவனுடைய மக்களுக்காக உங்கள் இருதயங்களை நீங்கள் விசாலமாக்குங்கள். "அவர்களுடைய தேவை என்ன அல்லது ஒரு சிலருடைய தேவை என்ன? நாம் அதற்காக என்ன செய்யலாம்? நாம் எப்படி கைலாகு கொடுக்கலாம். என்னுடைய பங்கு என்ன?" என்பவைகளைக்குறித்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். தேவன் ஒருநாளும் உங்களை வெட்கப்படுத்த மாட்டார். அதுபோல "இன்றிலிருந்து *5* வருடம், *10* வருடம், *20* வருடம் கழித்து தேவனுடைய மக்களுக்கு எது ஆசீர்வாதமாக இருக்கும்? எது நன்மையாக இருக்கும்? எது பயனுள்ளதாக இருக்கும்?" என்றும் சிந்தித்துப்பாருங்கள். இன்றைக்கு நாம் விதைக்கிறோம்.

கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், "*மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். துன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்*" (6:7-8) என்று சொல்லுகிறார். இன்றைக்கு அறுவடையைக்குறித்துக் கவலைப்பட வேண்டாம். என்ன விதைக்கிறோம் என்பதைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தேவனுக்காக என்ன விதைக்கிறோம்? தேவனுடைய மக்களுக்காக என்ன விதைக்கிறோம்? நம்முடைய இருதயத்தை எப்படி நாம் சீர்படுத்துகிறோம்? நம்முடைய இருதயத்தை நாம் எப்படி பழக்குவிக்கிறோம்? தேவனுடைய மக்களுக்கு நாம் எந்த விதத்திலே ஆசீர்வாதமாக இருக்கிறோம்?

இன்றைக்கு ஒருவேளை உங்களுக்குப் பெரிய ஆசீர்வாதம் இல்லாமல் போகலாம். கூட்டத்துக்காக நாற்காலிகளை வரிசையாக ஒழுங்குசெய்வது ஒரு ஆசீர்வாதம்தான். தேவன் இதை ஒருநாளும் அற்பமாக எண்ணமாட்டார் நாற்காலி துடைப்பது ஆசீர்வாதம்; கழிப்பறையைக் கழுவுவது ஆசீர்வாதம்; நான் அடிக்கடிச் சொல்வதுண்டு. தேவனுடைய மக்கள் கூடுகிற இடத்தில் முதலாவது நாம் எதற்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் தெரியுமா? கழிப்பறை, குப்பை போடுகிற இடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் பரிசுத்தவான்கள்; எல்லா மதிப்பிற்கும், எல்லா அன்பிற்கும், எல்லா கனத்திற்கும், எல்லா உபசரணைக்கும் உரியவர்கள். இன்றைக்கும் இது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். இன்னும் *5* வருடம், *10* வருடம், *50* வருடம் கழித்தும் தேவனுடைய மக்களுக்கும், தேவனை அறியாதவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் இந்த வார்த்தைகளை உங்கள் இருதயத்திலே பதிப்பாராக. *உடனடியாக வரும் பலன் அல்ல, இனி வரும் பலன்.*

சாத்தான் உடனடியாக வரும் பலனைக் காண்பித்து நம் கண்களை மயக்குவான்; இது அவனுடைய பெரிய தந்திரம்.

மோசேயைவிட நாம் பெரியவர்களல்ல. அவன் எகிப்தின் இளவரசன். ஆனால், எகிப்தின் பொக்கிஷங்களின்மேல் அவன் சந்தோஷமாயிராமல் இனி வரும் பலன்மேல் நோக்கமாயிருந்து கிறிஸ்துவின்

நிமித்தம் வருகிற நிந்தையை அவன் தெரிந்துகொண்டான். உலகத்தில் கிடைக்கிற நட்புக்காக அல்லது இந்த உலகத்திலிருந்து வருகிற சின்ன இலாபத்திற்காக, சின்ன ஆதாயத்திற்காக, சின்ன அநுகூலத்திற்காக சாத்தான் அதைக் காட்டுவான். ரொம்ப முக்கியமானது என்னவென்றால் தேவனுடைய மக்கள், குறிப்பாக வாலிபர்கள் நீங்கள் திருமணம் பண்ணுவீர்கள். ரொம்ப அழகான பையன் அல்லது ரொம்ப அழகான பெண், நல்ல சம்பாத்தியம், நல்ல படிப்பு, நல்ல அந்தஸ்து ஆகியவைகளை ஆதாமரமாகக் கொண்டு தெரிந்தெடுக்காதீர்கள். அப்படித் தெரிந்தெடுத்தவுடன் "இனிமேல் வாழ்க்கை மிகவும் பாதுகாப்பாக இருக்கும்" என்று நினைக்காதீர்கள். உண்மையிலே நாம் அமைக்கின்ற குடும்பம் தேவனுக்கும், தேவனுடைய மக்களுக்கும், தேவனை அறியாத மக்களுக்கும் கிறிஸ்துவை வழங்குவதற்கு ஒரு இல்லமாக இருக்க வேண்டும்; அது ஒரு பாத்திரமாக இருக்க வேண்டும். இதை அடிப்படையாகக்கொண்டு உங்கள் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுங்கள். அது இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருக்கும். அது இந்த உலகத்திலே உடனடியாக கிடைக்கின்ற ஒரு ஆதாயத்தையும், அநுகூலத்தையும், இலாபத்தையும் கிறிஸ்துவினிமித்தம் நாம் இழப்பது. அதேபோல் எப்போதும் "நான், என் படிப்பு, என் வேலை, என் மனைவி, என் கணவன், என் பிள்ளை, என் எதிர்காலம்," என்று இருக்கவேண்டாம். அது நம் ஆசீர்வாதத்தைத் தடுத்துவிடும். நாம் நம் இருதயத்தை விசாலமாக்குவோம். தனக்கானவைகளை அல்ல பிறருக்கானவைகளை நோக்குவோம், நாம் படிக்கின்ற படிப்பு, நாம் செய்கின்ற வேலை, நாம் கட்டுகின்ற வீடு, நாம் வாங்குகின்ற வாகனம் எல்லாவற்றிலும் இந்தக் கேள்வி இருக்க வேண்டும்: தேவனுடைய மக்களுக்கு இது ஆசீர்வாதமாக இருக்குமா? தேவனுடைய சுவிஷேசத்திற்கு ஆசீர்வாதமாக இருக்குமா? இதை நாம் எப்போதும் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படி இனி வரும் பலனையும், தேவனுடைய மக்களுக்கு, பிறருக்கு வரும் பலனையும் எண்ணுகின்ற மக்கள் உண்மையாகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கின்றவர்கள். இந்த உலகத்தின் பார்வையில் அவர்கள் ஞானிகள் அல்ல. இப்படி வாழ்ந்தால் நீங்கள் பெரிய ஆள் ஆக முடியாது. அதைப்பற்றி எந்தக் கவலையும் இல்லை.

யோவான் ஸ்நானனைப்பற்றித் தீர்க்கதரிசனம் உரைக்கும்போது அவருடைய அம்மாவினிடம், "அவன் தேவனுடைய பார்வையில் பெரியவனாயிருப்பான். He will be great in the site of the Lord." என்று சொன்னார். யோவான் ஸ்நானன் இந்த உலகத்தினுடைய பார்வையில் பெரியவனாயிருந்தானா? அவன் காட்டுவாசி; வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் சாப்பிட்டுகொண்டு, ஒட்டகத்தோலை ஆடையாகப் போர்த்துக்கொண்டு வாழ்ந்தவன். "Ladies and gentlemen" என்று ரொம்ப அழகான ஆங்கிலத்தில் பேசாமல் "விரியன்பாம்புக் குட்டிகளே" என்று அழைக்கிறார். "நீங்கள் மனந்திரும்பவில்லையென்றால் எல்லாரும் சாவீர்கள்" என்று சொன்னார். இப்படிச் சொன்னா "அடிங்கடா அவன" என்று சொல்லுவார்கள். இவன் உலகத்தின் பார்வையில் பெரியவனே இல்லை; ஆனால் தேவனுடைய பார்வையில் பெரியவன்.

ஆகவே, பிறருக்குக் கிடைக்கும் பலனிலும், இனி வரும் பலனிலும் நோக்கமாயிருக்கிறவர்களை இந்த உலகம் பெரியவர்களென்று கொண்டாடாது. ஆனால், இவர்கள் தேவனுடைய பார்வையிலே பெரியவர்கள். தேவன் இவர்களைக் கொண்டாடுவார். தேவன் இவர்களுடைய தேவன் என்று தம்மை அறிமுகப்படுத்துவார். "நான் தீமோத்தேயுவின் தேவன், நான் மோசேயின் தேவன், ஆபிரகாமின் தேவன்," என்று சொல்லிக்கொள்வதில் தேவன் வெட்கப்படமாட்டார் இது நம்முடைய மாபெரும் வெகுமதியாக இருக்கும். தேவன் இப்படிப்பட்ட இருதயத்தை நமக்குள் உருவாக்குவாராக. ஆமென்.